1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த நோய் பரவுகிற வகை, பரவுகிற அளவு பற்றி அவ்வப்போது புள்ளிவிவரம் எடுக்கப்படுகிறது. இந்த நோயைத் தடுத்து சிகிச்சை அளிக்கிற யூனிட் ஒன்று செங்கற் பட்டிலும் செயல்பட்டு வருகிறது. திருத்தணியைப் பற்றி செங்கல் பட்டு மாவட்ட யூனிட் நிச்சயமாகக் கவனிக்கும் என்று நம்புகிறேன்

காசநோய் தடுப்புத் திட்டம்.

* 420 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

காசநோய் தடுப்புத் திட்ட விளம்பரப் பிரிவினை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் தமிழ்நாடு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: காசநோய் பற்றியும், அதைத் தடுக்கும் முறைபற்றியும் திரைப்படங்கள் மூலமாகக் கிராமங்கள்தோறும் பிரச்சாரம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, காசநோய் விளம்பரம் பற்றிய பிரிவுகள் 2 செயல்பட்டு வருகின்றன. ஒன்று மருத்துவ சுகாதாரத்துறை இயக்குநர் மூலமாகவும், மற்றொன்று மதுரை மருத்துவக் கல்லூரித் தலைவர் டீன் தலைமையிலும் செயல் பட்டு வருகிறது. இந்த இரண்டு பிரிவுகளும் யுனிஸெஃப் வெகிகிள் ஒன்றைப் பெற்று சினிமாப்படங்கள் மூலமாக அங்கங்கே காட்டி வருகிறார்கள். நாட்டு மக்கள்தொகை, பரப்பளவு இவற்றோடு ஒப்பிடுகிறபோது, இது எல்லாப் பகுதியிலும் அவ்வளவாகப் புலனாகாது. ஆனாலும் இந்தப் பகுதிகளில் வேறு பலவகையான துறைகளின் மூலமாகவும் இந்த நோய் தடுப்புக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: சின்னாளப்பட்டியில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களிடையேதான் காச நோய் அதிகமாக இருக்கிறது என்று டாக்டர்கள் சொல்கிறார் கள். ஆகவே அதைத் தடுக்க அரசு அதிகம் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த நோய் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் அதிகம் வருகிறது என்பது ஒருவகையில் தவறு. ஆலைகளில் வேலை செய்யக்கூடியவர் களுக்கு பஞ்சுத் துகள்மூலமாக இந்த நோய் பரவக்கூடும் என்பது விஞ்ஞான முறையில் சொல்லக்கூடிய ஒன்றாகும். ஆயினும் கைத்தறி நெசவாளர்களிடம் பரவியிருக்கிறது என்றால்—டெபிசிட் இன் டயட்—சத்துள்ள உணவு கிடைக்காத அளவுக்கு வறுமையினால் வளரக் கூடும். அது ஒரு சமுதாயப் பிரச்சினை. எந்த அளவுக்கு அதைத் தடுக்க முடியுமோ, அந்த அளவு தடுக்க முயற்சிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, காசநோய்க்கு ஒரே தென்னை மரத்தில் வடிகிற கள்ளை 48 நாளைக்கு சாப்பிட்டால்......

MR. DEPUTY SPEAKER : The main question relates to propaganda.

திரு. பெ. மலைச்சாமி : ஒரே தென்னை மரத்தில் வடிகிற கள்ளை 48 நாளைக்குக் குடித்தால், காசநோய் நீங்கிவிடும் என்பதாக கிராம மக்கள் அனுபவத்தின் பேரில் சொல்கிறார்களே, ஆகவே இதைப் போதைப் பொருளாகக் கருதாமல் மருந்துப் பொருளாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மருத்துவமனையில் வழங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் உள்ள ஒரு நுட்பமான கருத்தை அவையினர் அறிந்து கொள்வது நல்லது. குழந்தைகளுக்குக்கூட தென்னைமரத்துக் கள்ளை 48 நாட்கள் கொடுத்தால், பலவிதமான நோய்கள் அகன்றுவிடு கின்றன. நோயை எதிர்த்து வெற்றிபெறும் சக்தியை இது உடலுக்கு அளிக்கிறது. போதைப் பொருளாக அல்ல. போதை ஏறினால் நோய் நீங்காது.

DR. H. V. HANDE : The Hon. Minister was replying about the propaganda measures taken by this Government. May I know whether it is a fact that the Government are finding it difficult to have Tuberculosis Sanatoria because of paucity of funds? Will the Government make enough propaganda to convince the public that it is better also for some of the persons to have ambulatory treatment so that they can go to the hospital and have treatment. In fact the last Ministry have introduced the ambulatory treatment. May I know the steps taken by this Government to once again introduced this and expand the ambulatory treatment, and the steps taken by this Government to see that these persons are also properly treated and the persons also visited by those concerned?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The treatment through ambulation is not so easy in this country. Experts are needed and one are two experts are also available in the Sanatorium in Sengipatti. It is going to be tried by an expert who has got experience and training in a foreign country.

திரு. எம். சுரேந்திரன் : பஞ்சாலைகளும், கெமிகல் ஆலைகளும் வளர்ந்துகொண்டு வருகிற நிலைமையில் அதிகமான டி.பி. பேஷன்ட் உண்டாகிக் கொண்டிருக்கிறார்கள். டி.பி. சானிடோரியங்களில் போதுமான இடமில்லாத காரணத்தினால், ரிஜிஸ்தர் செய்துவைத்து வெகுநாட்களானாலும் இடம் கிடைப்பதில்லை என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக அங்கங்கே சானடோரி யத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த சானடோரியம் நாட்டில் பெருந்துறை, செங்கிப்பட்டி, இன்னும் செட்டிநாட்டுப் பக்கத்தில் காரைக்குடி ஆகிய இடங்களில் நடை பெறுகிறது. அங்கே படுக்கை வசதிகள் இருக்கின்றன. செலவுக்குத் தந்து அங்கே சேருவதற்கு பலருக்கு வசதியில்லை என்ற நிலைமை இருக்கிறது. தொழிலாளர்களின் செலவை ஏற்றுக்கொண்டால், நிச்சயமாக தேவையான மருத்துவம் கிடைக்கும்.